# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 10 x 1 = 10

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கூறியது ______.
அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

2. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

3. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
அ) மேம்பட்ட நிருவாகத் திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனித நேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

4. மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும். மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
அ) திருப்பதியும், திருத்தணியும் ஆ) திருத்தணியும், திருப்பதியும்
இ) திருப்பதியும், திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும், பழனியும்

5. மேன்மை தரும் அறம் என்பது
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

6. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' - இவ்வடி குறிப்பிடுவது ______.
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

7. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

8. வெண்பாவின் ஓசை
அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ) துள்ளல் ஓசை ஈ) தூங்கலோசை

9. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ______.
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

10. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும், சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயற்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

II. குறுவினாக்கள் (எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி) 5 x 2 = 10

11. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
12. குறிப்பு வரைக : அவையம்
13. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
14. கலைச்சொல் தருக : அ) Irrigation ஆ) Belief

CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



15. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்து.
16. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.
17. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

III. சிறுவினாக்கள் (எவையேனும் 4 மட்டும்) 4 x 3 = 12

18. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?
19. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
20. ஆசிரியப்பாவின் இலக்கணத்தை எழுது.
21. அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான் ; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்கு.
22. வாளித் தண்ணீர், சாயக்குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

IV. இரண்டனுக்கு விடையளி. 2 x 5 = 10

23. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



24. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.
25. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

V. கட்டுரை வடிவில் எழுதவும். 1 x 8 = 8

26. அ) *குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதவும்.*

மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்கவேண்டும். கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவர் மகிழ்ச்சி.

*(அல்லது)*

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

******

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com